இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 27-01-2024

# காந்திஜி நேதாஜி ரவிஜி

“இந்தியாவுக்கு சுதந்திரத்தை காந்திஜி வாங்கித் தரவில்லை, நேதாஜி தான் வாங்கித் தந்தார்” என்பதைக் கண்டுபிடித்திருக்கிறார் ரவிஜி. ஆளுநர், அன்னாரது பேச்சில் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் குறித்த பாசம் பொங்கி வழிகிறது. அது நேதாஜி மீதான உண்மையான பாசம் அல்ல. எதையாவது சொல்லி காந்தியடிகளை மட்டுப்படுத்த வேண்டும். அவ்வளவு தான். இந்த நாட்டில் காந்தி பக்தர்கள் யாராவது இதற்குக் கண்டனம் தெரிவித்திருக்கிறார்களா என்றால் இல்லை!

**நேதாஜி சுபாஸ் சந்திரபோஸைப் பற்றிப் பேசுவதற்கான உரிமை ஆளுநர் ரவிக்கு உண்டா? இவரது இந்து மகாசபைத் தலைவர்கள், ஆர்.எஸ்.எஸ். அமைப்பு அந்தக் காலத்தில் நேதாஜியை ஆதரித்ததா? போஸின் இந்திய தேசிய ராணுவத்தை ஆதரித்ததா?**

**பிரிட்டிஷ் படைகளுக்கு எதிராக இந்திய தேசிய ராணுவத்தை நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் கட்டமைத்துக் கொண்டிருந்த போது, பிரிட்டிஷ் படைகளுக்கு ஆள் சேர்த்துக் கொண்டிருந்தவர்தான் இந்து மகாசபைத் தலைவர் சாவர்க்கர். ‘இரத்தத்தைத் தாருங்கள், உங்களுக்கு விடுதலையை வாங்கித் தருகிறேன்’ என்று நேதாஜி கர்ஜித்துக் கொண்டிருந்தபோது, பிரிட்டிஷ் படைகளுக்கு இரத்தம் சேகரித்துக் கொடுத்துக் கொண்டிருந்தவர்தான் சாவர்க்கர்.**

இந்தியாவில் இருந்து பிரிட்டிஷாரை அகற்றுவதற்காக ராணுவ நடவடிக்கைகளை எடுத்த மாவீரன்தான் சுபாஸ் சந்திரபோஸ். இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த 1940 ஆம் ஆண்டுகளின் தொடர்ச்சி அவை. அந்நிய நாடுகளின் உதவியைப் பெற்று பிரிட்டிஷ் இந்திய அரசை ராணுவ ரீதியாக வெல்ல நினைத்தார் போஸ். அதற்காக இந்திய தேசிய ராணுவத்தை அமைத்தார். அந்த நேரத்தில், பிரிட்டிஷ் ஆட்சியின் ராணுவத்துக்கு ஆள் எடுக்கும் சேவையைச் செய்து வந்தார் சாவர்க்கர்.

**“யுத்தம் நம் கடற்கரைகளை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் இந்து மகாசபைகளைச் சேர்ந்தோர் ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகிய படைகளில் சேர வேண்டும். மக்களையும் சேர்க்க வேண்டும். இதனை ஒவ்வொரு கிளையும் மிகத் தீவிரமாகச் செய்ய வேண்டும். ... ஜப்பான் யுத்தத்தில் நுழைந்திருப்பது என்பது, பிரிட்டனின் எதிரிகளால் நாம் நேரடியாகவும், உடனடியாகவும் தாக்குதலுக்கு உள்ளாகும் நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறது. ... இந்துக்கள் பிரிட்டிஷ் ராணுவத்தையும், கப்பல் படையையும், விமானப் படையையும் வெள்ளம் போல் நிரப்பிட வேண்டும்..” - என்று 1941 ஆம் ஆண்டு பகல்பூர் இந்து மகாசபையின் 23 ஆவது மாநாட்டில் பேசியவர் சாவர்க்கர்.**

**உயிரைப் பணயம் வைத்துப் படைகட்டி, பிரிட்டிஷாருக்கு எதிராக போஸ் போராடிக் கொண்டிருந்தபோது, அவரின் இந்திய தேசிய ராணுவத்துக்கு எதிராகப் படைவீரர்களைத் திரட்டிய சாவர்க்கரின் வாரிசுதான் ரவிஜி, இன்று நேதாஜியைப் பற்றி பேசத் தொடங்கி இருக்கிறார்.**

அப்போது பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியை ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளின் துணையோடு நடத்தியது நேதாஜி மட்டும்தான்.

**மதுராவில் நடைபெற்ற மாநாட்டில் பேசிய சாவர்க்கர், ‘இன்றைய நிலைமையில் எந்தவிதமான ஆயுதம் தாங்கிய கிளர்ச்சி நடவடிக்கையிலும் நாம் நம்மைக் கட்டாயமாக உட்படுத்திக் கொள்ளக் கூடாது’ என்றார்.**

**பிரிட்டிஷ் ராணுவத்துக்கு ஒத்துழைப்பதைத் தவிர வேறு சிறந்த வழி நமக்கு இருக்க முடியாது என்றும் பேசியவர் அவர். ‘பிரிட்டிஷாருடன் ஒத்துழைத்துச் செயல்படுவது இன்றைய சூழ்நிலையில் சாத்தியமாக இருப்பதால் அவ்வாறு தவிர்க்க முடியாத விதத்தில் ஒத்துழைப்பு நல்கி, அதனை உன்னுடைய நாட்டுக்கு லாபமானதாக மாற்றிடுக’ என்று கட்டளையிட்டவர் சாவர்க்கர்.**

**இவரது வாரிசுகள்தான் இன்று தேசபக்த நாடகங்கள் போடுகிறார்கள்.**

போரை காங்கிரசு கட்சி ஆதரிக்க வேண்டும் என்றது பிரிட்டிஷ் அரசு. ‘இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுங்கள். அதன்பிறகு ஆதரிக்கிறோம்’ என்று நிபந்தனை விதித்தது காங்கிரசு. இதெல்லாம் ஆளுநர் அறிவாரா?

“காந்திஜியா? நேதாஜியா? யாரால் கிடைத்தது இந்திய சுதந்திரம்” என்ற பட்டிமன்றம் பிறகு நடத்தலாம். இந்திய சுதந்திரத்துக்கு இந்து மகாசபை, ஆர்.எஸ்.எஸ். பிதாமகர்கள் ஆற்றிய தொண்டு என்ன? சட்டமறுப்பு இயக்கத்தில், உப்பு சத்தியாகிரகத்தில், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் இவர்களது பங்களிப்பு என்ன?

**பிரிட்டிஷாருக்கு எதிராக ‘இந்தியர்கள்’ அனைவரும் போராட வேண்டும் என்ற உணர்வை காங்கிரசும் காந்தியும் உருவாக்கி வந்தபோது, அதைச் சிதைக்கும் வகையில் ‘இந்து தேசியம்’ என்ற உணர்வை விதைத்தவர்கள்தான் இவர்கள். ‘இந்தியாவில் இருக்கும் அனைவரும் இந்தியர்கள்’ என்ற நாட்டு எல்லை தேசியத்தை காங்கிரசு முன்வைத்தபோது, ‘இந்துக்கள் மட்டுமே இந்தியர்கள்’ என்ற கலாச்சார தேசியத்தை விதைத்தவர்கள்தான் இவர்கள். இந்திய தேசிய உணர்ச்சி எழுந்துவிடாமல் தடுப்பணை போட்டவர்கள் இவர்கள்.**

‘சுதந்திரப் போராட்டம் என்பது வெறும் பிரிட்டிஷ் எதிர்ப்பு இயக்கம் ஆகிவிட்டது. பிரிட்டிஷ் எதிர்ப்பு என்பது தேச பக்தியாகவும், தேசிய உணர்வாகவும் கருதப்படுவதே பிற்போக்கானதாகும்’ என்று சொன்னவர் ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வால்கர். சட்டமறுப்பு இயக்கத்தை காங்கிரசு தொடங்கிய போது, ‘1942 க்குப் பிறகு சட்டத்தை மதிக்கவே தேவையில்லை என்று மக்கள் நினைக்கத் தொடங்கிவிட்டார்கள்’ என்று விமர்சித்தவர் கோல்வால்கர். அவருக்கு முன்னால் தலைவராக இருந்த ஹெட்கேவர், “சிறைக்குச் செல்வது மட்டுமே தேசபக்தி அல்ல” என்று கிண்டலடித்தார்.

**இவர்கள் அனைவரையும் “பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆதரவாளர்கள்” என்று அப்போதே குற்றம் சாட்டியவர் ஜவஹர்லால் நேரு.**

- 1933 ஆம் ஆண்டு பனாரஸ் இந்து பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் பேசும் போது நேரு இப்படிக் குறிப்பிட்டார்.

இந்தியா சுதந்திரம் அடைந்தபோது, அறிமுகம் செய்யப்பட்ட மூவர்ணக் கொடியை ஏற்றவர்கள் அல்ல ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர். அதனைக் கண்டித்தும் எழுதினார்கள். தங்கள் அலுவலகங்களில் அரை நூற்றாண்டுக் காலம் தேசியக் கொடியை ஏற்றவும் இல்லை. இத்தகைய கூட்டம் தேசபக்தி வகுப்பெடுப்பதைப் பார்க்கும் போது குமட்டுகிறது.

# தமிழ் நாடு அரசின் சார்பில் - சென்னை - காமராசர் சாலையில் - குடியரசு நாள் விழா!

முதல் பக்கத் தொடர்ச்சி

பின்னர் முதல்வர் அவர்கள் - ‘காந்தியடிகள் காவலர் பதக்கங்களை’, விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சசாங் சாய், மத்திய நுண்ணறிவுப் பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் காசிவிஸ்வநாதன், மதுவிலக்குப் பிரிவு காவல் ஆய்வாளர் கே.எம்.முனியசாமி, மத்திய நுண்ணறிவுப் பிரிவு காவல் உதவி ஆய்வாளர் பாண்டியன், மத்திய நுண்ணறிவு பிரிவு தலைமை காவலர் ரங்கநாதன் ஆகியோருக்கு வழங்கினார்கள்.

**சிறந்த காவல் நிலையங்களுக்கான விருதுகள்!**

பின்னர் சிறந்த காவல் நிலையங்களுக்கான ‘முதலமைச்சர் விருதுகளை’ முதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.

விருது பெற்றவர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்வுகளையடுத்து விழாவில் - நமது தமிழ்ப் பண்பாடு, பாரம்பரியத்தைப் பறைசாற்றும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தமிழ்நாடு அரசுப்பள்ளி, தனியார் பள்ளி மாணவிகளின் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகளை ஆளுநர் ஆர்.என்.ரவி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் பார்வையிட்டார்கள்.

இதனைத்தொடர்ந்து, ஒடிசா கலைக் குழுவினர் சார்பில் பாரம்பரிய நடன நிகழ்ச்சியும், மணிப்பூர் மக்களின் பாரம்பரிய கலை நிகழ்ச்சியும், அசாம் மாநிலத்தின் பாரம்பரிய நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.1.2024) சென்னை, காமராசர் சாலையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், மதுரை மாவட்டம், யா.கொடிக்குளம் ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலைப் பள்ளியை தரம் உயர்த்துவதற்காக தனது 1 ஏக்கர் 52 செண்ட் நிலத்தினை தானமாக வழங்கிய திருமதி உ. ஆயி அம்மாள் என்கிற பூரணம் அவர்களின் தன்னலமற்ற கொடை உள்ளத்தை பாராட்டி அவருக்கு முதலமைச்சரின் சிறப்பு விருதினை வழங்கி சிறப்பித்தார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.

அதனையடுத்து, தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அதில் - தமிழ்நாட்டின் பாரம்பரியத்தைப் பறைசாற்றும் விதமாக, மயிலாட்டம், ஒயிலாட்டம் போன்ற பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள் கோலாகலமாக நடைபெற்றன.

**அரசுத் துறைகளின் அலங்கார வாகன அணிவகுப்பு!**

குடியரசு தினவிழாவையொட்டி பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடைபெற்றது. இதில், கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கின் மாதிரி, தமிழ்நாடு அரசின் சாதனைகளை விளக்கும் ஊர்திகள், விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டின் சாதனைகளை விளக்கும் ஊர்திகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் ஊர்திகள் அணிவகுத்துச் சென்றன.

## கொள்முதல் நிலையங்கள் தேவையான இடங்களில் திறக்கப்பட்டு

# நெல் கொள்முதல் தங்கு தடையின்றி நடைபெறுகிறது!

## உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!



*சென்னை, ஜன.27-*

*நெல் கொள்முதல் நிலையங்கள் தேவையான இடங்களில் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் தங்கு தடையின்றி செய்யப்படுகின்றது என்று உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்பு நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பதற் காக மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் இரண்டு விவசாயிகள், வேளாண்மை இணை இயக்குனர், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆகியோர் கொண்ட குழு அமைக்கப் பட்டுள்ளது. இதன்படி தேவைப்படும் இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப் பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.*

*தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் முதல் நாளன்று தொடங்கும் நெல் கொள் முதல் பணியானது, உழவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒரு மாதம் முன்னதாகவே செப்டம்பர் முதல் நாள் முதல் நெல் கொள்முதல் செய்திட ஒன்றிய அரசிடம் அனுமதி பெறப் பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி முதல் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.*

**5,54,874 மெ. டன் நெல் கொள்முதல்!**

*தமிழ்நாட்டில் 01.09.2023 முதல் நாளது தேதி வரை 5,54,874 மெ. டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, 87,811 விவசாயிகளுக்கு ரூ. 1,257.81 கோடி அவர்கள் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட் டுள்ளது.*

*தற்போது காவிரி பாசன மாவட்டங்களில் (Delta Districts) சம்பா அறுவடைப் பணிகள் ஆரம் பிக்கப்பட்டு நெல்வரத்து வர துவங்கியுள்ளதால் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க ஒப்புதல் ஆணை வழங்கப்பட் டுத் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப் பட்டு வருகிறது.*

*காவிரி மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், கடலூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் 957 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு 195 நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் நடைபெற்று வருகிறது. விவசாயிகள் தங்கள் நெல்லை எப்போது கொண்டுவந்தாலும் கொள்முதல் செய்ய இவை தயார் நிலையில் உள்ளன.*

*12 ஆண்டுகளுக்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் மாநில அரசு வழங்கும் ஊக்கத்தொகையை உயர்த்தி வழங்க ஆணையிட்டுத் தற்போது நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் குவிண்டால் ஒன்றிற்கு சன்னரக நெல்லுக்கு மாநில அரசின் பங்களிப்பு ரூ.107-ம் சேர்த்து ரூ.2,310-க்கும், பொதுரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு மாநில அரசின் பங்களிப்பு ரூ.82-ம் சேர்த்து ரூ.2,265-க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது.*

*நெல் கொள்முதல் தொடர்பாக விவசாயிகள் புகார் தெரிவிக்கும் பொருட்டு கட்டணமில்லா தொலைபேசி எண் (உழவர் உதவி மையம்) 1800 599 3540 மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய துறை உயர் அலுவலர்களின் அலைபேசி எண்கள் கொண்ட அறிவிப்புப் பதாகையும் புகார் பெட்டியும் ஒவ்வொரு நெல் கொள்முதல் நிலையத்திலும் வைக்கப்பட்டுள்ளன.*

*இந்நிலையில் நேற்று அரசியல் கட்சி ஒன்றின் தலைவர் தன் டிவிட்டர் பக்கத்தில் நெல் கொள்முதல் நிலையங்கள் சரியாகத் திறக்கப்படுவதில்லை என்று பதிவிட்டுள்ளார். ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி தேவைப்படும் இடங்களில் நெல்கொள்முதல் நிலையங்கள் உடனுக்குடன் திறந்து நெல் கொள்முதல் செய்யப்படும் விவரம் அந்தந்தப் பகுதி நெல் விவசாயிகளுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும்.*

*இன்று (25.01.2024) தலைமைச் செயலாளர் அவர்களால் காணொலி வாயிலாக நடத்தப்பட்ட காவிரிப் பாசன மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கூட்டத்திலும் நெல் கொள்முதல் நிலையங்களைத் தேவைப்படும் இடங்களில் விரைந்து திறந்து நெல் கொள்முதல் செய்திட வலியுறுத்தப் பட்டுள்ளது.*

*தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடப்பு சம்பா பருவத்தில் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்வதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதால் விவசாயிகள் தங்கள் நெல்லினை இவற்றில் விற்றுப் பயன் பெற்றிடக் கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.*

கலைஞர் 100
1924 - 2023
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
(கலை பண்பாட்டு இயக்ககம்)
கலைஞர் நூற்றாண்டு மற்றும்
பொங்கல் விழா - இசைச் சங்கமம்
நாள்: 27.01.2024 சனிக்கிழமை மாலை 5.30 மணி
இடம்: கலைவாணர் அரங்கம், வாலாஜா சாலை, சென்னை-5
வரவேற்புரை : திருமதி விஜயா தாயன்பன் உறுப்பினர் - செயலர்
தலைமை : திரு. வாகை சந்திரசேகர் தலைவர்
வாழ்த்துரை : மாண்புமிகு பி.கே.சேகர்பாபு அவர்கள்
இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்
திரு. என்.ரவி அவர்கள்
இயக்குநர், தி இந்து குழுமம்
"கலைமாமணி" திருமதி. நந்தினி ரமணி அவர்கள்
மூத்த நாட்டியக் கலைஞர்
திரு. ஜி.இராமானுஜம்
தலைவர், முத்தமிழ்ப் பேரவை
சந்திக்கும் சலங்கைகள்
(நாட்டிய நிகழ்ச்சி)
பரதமும் குச்சிப்புடியும்
பரதநாட்டியம்: திருமதி பிரியதர்ஷினி கோவிந்த் அவர்கள்
குச்சிப்புடி: திருமதி மஞ்சு பார்கவி அவர்கள்
தெய்யம்: திரு. சிவதாசன் குழுவினரின்
கேரள கிராமிய நடனம்
அனைவரும் வருக!
அன்புடன் அழைக்கும்: M.R.M.பாலசுப்பிரமணியம்
அவைத்தலைவர், மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.